# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Karapakkam, Chennai - 600 097
Phone: 044 – 28389040 Website: www.tnteu.ac.in


**Lr.No.TNTEU/COE/2020/188** **Date: 14.09.2020**

**Dr.M.Govindan, Ph.D.,**
Controller of Examinations i/c

## இணையவழி தேர்விற்கான வழிகாட்டு நெறிமுறைகள்
## (GUIDELINES FOR ONLINE EXAMINATIONS)

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) வழிகாட்டுதலின்படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படியும், உயர்கல்வித்துறையினால் 10.09.2020 அன்று நடத்தப்பட்ட அனைத்து துணைவேந்தர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படியும், நமது பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் செயலர்கள் மற்றும் முதல்வர்களுடன் 11.09.2020 அன்று இணையவழிக் கூட்டத்தில் கலந்து ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவுகளின்படியும், மே/ஜுன் 2020-ல் நடத்தப்படவேண்டிய **B.Ed. / B.Ed.(Spl. Edn.) / M.Ed. / M.Ed.(Spl.Edn.) / B.Sc.B.Ed. (Non-Semester-IV Year)/M.Phil.** நடப்பு இறுதியாண்டு தாள்கள் (Final year current Papers) மற்றும் இறுதியாண்டு நிலுவைத் தாள்களுக்கான (Final year Arrear Papers) தேர்வுகளையும் (Theory / Practical / Viva-Voce) 17.09.2020 முதல் 29.09.2020-க்குள் இணையவழியில் நடத்தி முடிக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கல்லூரியும் இணையவழி தேர்வு மற்றும் அது தொடர்பான செயல்களை மேற்கொள்வதற்கு கல்லூரி தேர்வுக்குழு (Examination Committee) ஒன்றை கீழ்கண்டவாறு அமைக்கவேண்டும். கல்லூரித் தேர்வுக்குழுவில் குறைந்தபட்சம் 3 நபர்களும் அதிகபட்சமாக 5 நபர்கள் வரையும் இடம்பெறலாம். அக்குழுவில் கல்லூரி முதல்வர் (தலைவர்), கணினி தொழில்நுட்பம் நன்கு தெரிந்த இருவர் (உறுப்பினர்) மற்றும் இதர பேராசிரியர்கள் (உறுப்பினர்கள்) இடம்பெற வேண்டும். கல்லூரித் தேர்வுக்குழுவினர் மட்டுமின்றி இதர பேராசிரியர்களையும் தேர்வு நடத்துவதற்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

**கல்லூரித் தேர்வுக்குழு கட்டமைப்பு (Structure of College Examination Committee)**

| வ.எண். | பதவி | பெயர் | WhatsApp எண் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|
| 1 | தலைவர் (முதல்வர்) | | | |
| 2 | உறுப்பினர் 1 | | | |
| 3 | உறுப்பினர் 2 | | | |
| 4 | உறுப்பினர் 3 | | | |
| 5 | உறுப்பினர் 4 | | | |

கல்லூரி முதல்வர்கள், தாங்கள் ஏற்படுத்திய கல்லூரித் தேர்வுக்குழுவின் கட்டமைப்பு விவரத்தினை 16.09.2020-ஆம் தேதிக்குள் பல்கலைக்கழகத்திற்கு (**tnteuonlinexam@gmail.com**) என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி பல்கலைக்கழகத்தின் உரிய அனுமதியை பெறவேண்டும். மேலும் தாங்கள் இணையவழித் தேர்வினை எவ்வித தவறுமின்றி நடத்துவோம் என்று இத்துடன் இணைக்கபட்டுள்ள உறுதிமொழிப் படிவத்தினை (இணைப்பு-1) பூர்த்தி செய்து கையொப்பமிட்டு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் உள்ள தேர்வு அட்டவணையை மாணாக்கருக்கு பகிர்ந்துகொள்வதுடன், அத்தேர்வு அட்டவணையின்படி தேர்வை முறையாக நடத்திட வேண்டுமென கல்லூரி முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
2. கல்லூரி தேர்வுக் குழுவினர், தங்கள் கல்லூரியில் படிக்கின்ற மாணாக்கருக்கு இணையவழித் தேர்வில் (Online Examination) தங்குதடையின்றி பங்குகொள்வதற்கு தேவையான Android Mobile Phone/Tab/ Laptop/ Desktop (Computer), மற்றும் இதர உபகரணங்களை மாணாக்கர் முன்கூட்டியே ஏற்பாடு செய்துள்ளனரா என்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.
3. கல்லூரி முதல்வர்கள் தங்களது கல்லூரியில், உயர்தர வேகத்துடன் கூடிய இன்டெர்நெட் வசதி, G-mail Account-ல் போதிய Storage மற்றும் தடையில்லா மின்சார வசதியினை முன்னேற்பாடாக செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
4. மாணாக்கர் தேர்வு எழுதுவதற்கு தேவையான, தரமான A4 Size வெள்ளைத் தாள்களை, தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்பே தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு கல்லூரி முதல்வர்கள் மாணாக்கருக்கு அறிவுரை வழங்கவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
5. மாணாக்கர் விடைத்தாளின் முகப்பு பகுதி (Front page இணைப்பு–2) பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து அனைத்து தேர்வுகளுக்கும் தேவையான முகப்பு பகுதியை முன்கூட்டியே பதிவிறக்கம் செய்து, அதனை பூர்த்தி செய்து தேர்வு விடைத்தாளின் முகப்பு பகுதியாக இணைத்து அனுப்புமாறு கல்லூரி முதல்வர்கள், மாணாக்கருக்கு அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.
6. கல்லூரி முதல்வர்கள், தங்களது மாணாக்கர் ஒவ்வொருவரும் மின்னஞ்சல் முகவரியை (E-mail id) உருவாக்கிக்கொள்ளவேண்டுமென்றும், அம்மின்னஞ்சல் முகவரி மற்றும் Whatsapp எண் ஒன்றை தேர்வுக்கும், பிற செய்திகளை பகிர்ந்து கொள்வதற்கும், தங்களுக்கு அறிவிக்கும்படியும் மாணாக்கரை அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
7. மாணாக்கர் இணையவழித் தேர்வினை சிரமமின்றியும், எந்தவித தடங்கலுமின்றியும் எழுதுவதற்கு, அவர்களுக்கு குறைந்தது 2 மாதிரித் தேர்வுகளை (Mock Tests) மின்னஞ்சல் மற்றும் Whatsapp செயலியைப் பயன்படுத்தி பயிற்சி வழங்கிட கல்லூரித் தேர்வுக்குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. நடைபெற இருக்கின்ற இணையவழித் தேர்வுகள் வழக்கமான Question Paper Pattern மூன்று மணி நேரம் (Full Course)/ஒன்றரை மணி நேரம் (Half Course) என்ற கால அளவில் நடைபெறும் என்பதையும் மாணாக்கருக்கு தெரிவிப்பதுடன், அதைப் பயிற்சியின் பொழுதும் (Mock Test) கையாள வேண்டுமென கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
9. கல்லூரி முதல்வர்கள் தங்களது மாணாக்கர்களுக்கு மாதிரித்தேர்வு நடத்தும்போது பல்கலைக்கழகத்திலிருந்து வழங்கப்பட்ட Front Page (இணைப்பு-2) முதல் பக்கம் முழுமையாக பூர்த்தி செய்யவும், ஒவ்வொரு பக்கத்திற்கும் பக்க எண் (Top of the corner), ஒவ்வொரு பக்கத்தின் அடிப்பகுதியில் (Bottom of the corner) மாணாக்கர் கையெழுத்து , குறித்த நேரத்தில் வருகைப்பதிவு, விடைத்தாளை scan செய்து pdf முறையில் கல்லூரி முதல்வருக்கு அனுப்புவதற்கு முறையான பயிற்சி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.
10. இறுதியாண்டு தேர்விற்கு விண்ணப்பித்த நடப்பாண்டு மற்றும் Arrear மாணாக்கருக்கு மட்டும் தேர்வு அனுமதிச்சீட்டு (Hall Ticket) 15.09.2020-ஆம் தேதிக்கு பிறகு அனைத்து கல்லூரிகளுக்கும் College Login மூலம் அனுப்பப்படும். அதனை கல்லூரி முதல்வர்கள் தங்களது மாணாக்கருக்கு Mail/Whatsapp மூலம் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
11. B.Ed. / B.Ed.(Spl. Edn.) / M.Ed. / M.Ed.(Spl.Edn.) / M.Phil. ஏற்கனவே படித்து முடித்த மாணாக்கர்கள் தங்களுடைய இறுதியாண்டிற்குரிய (Final Year) நிலுவைத்தாள்களுக்கு (Arrear Papers) தேர்வுக்கட்டணம் செலுத்தியிருந்தால் மட்டுமே இத்தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதை கல்லூரி முதல்வர்கள் தங்களது மாணாக்கருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
12. அரசு உத்தரவின்படி மாணாக்கரை தேர்வு எழுதுவதற்காக கல்லூரிக்கு நேரடியாக வருமாறு கல்லூரிகள் வற்புறுத்தக்கூடாது என கோரப்படுகிறது.
13. தங்களது கல்லூரியில் படிக்கின்ற மாணாக்கர் இணையவழித் தேர்வில் பங்குகொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகளை அவர்களுக்கு E-mail மற்றும் Whatsapp மூலம் தினந்தோறும் அனுப்பி ஊக்கப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
14. ஒவ்வொரு தேர்விற்கும், தேர்வு தொடங்கும் நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாக தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திலிருந்து வினாத்தாள் College Login, கல்லூரியின் அலுவலக மின்னஞ்சல் (College Official E-mail ID) மற்றும் புலனச்செயலி (Whatsapp) மூலமாக அனுப்பி வைக்கப்படும். அதனை, கல்லூரி முதல்வர் மின்னஞ்சல் மற்றும் புலனச்செயலி (Mail/Whatsapp) மூலமாக தேர்வு தொடங்கும் நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு மாணக்கருக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
15. கல்லூரியிலிருந்து மாணாக்கருக்கு தேர்வு வினாத்தாள் அனுப்பும் பொழுது பத்து பத்து மாணக்கருக்கு பிரித்து அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(இல்லையென்றால் அனுப்பிய அனைத்து Mail திரும்ப உங்களுக்கே வருவதற்கும் வாய்ப்புள்ளது).

16. கல்லூரி முதல்வரிடமிருந்து, தேர்வு நாளன்று மாணாக்கர்கள் வினாத்தாள் கிடைக்கப் பெற்றவுடன் Question paper received என்ற தகவலை Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
17. ஒவ்வொரு தேர்விற்குரிய காலத்திற்குள் தேர்வினை எழுதி முடிக்கவேண்டும். அத்துடன் தேர்வு முடிந்த நேரத்திலிருந்து அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் மாணவர்கள் அத்தேர்விற்குரிய விடைத்தாள்களை scan செய்து File Name ஆக மாணாக்கரின் Register number,subject code கொண்டு Save செய்து கல்லூரி முதல்வருக்கு உடனடியாக மின்னஞ்சல் (E-mail) புலனச்செயலி (Whats app) மூலமாக Pdf Format-ல் அனுப்பவேண்டுமென்று முதல்வர்கள் மாணாக்கருக்கு அறிவுறுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
18. தங்களது கல்லூரியைச் சார்ந்த Visually Impaired மாணாக்கருக்கு அரசு மற்றும் பல்கலைக்கழக விதியின்படி தேர்வு எழுத கூடுதல் நேரம் அளிப்பதுடன் அவர்களுக்குரிய Scribe உட்பட அனைத்து உதவிகளையும் செய்து தரும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
19. மாணாக்கர் தங்களுடைய தேர்வு எழுதும் வருகையை 9.30 மணி முதல் 10 மணிக்குள் (Name, Register No., Present) என்ற தகவலை Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
20. கல்லூரி முதல்வர்கள் நாள்தோறும் இணையவழித் தேர்வு எழுதும் மாணாக்கரின் வருகைப்பதிவினை College Login-ல் 10.00 மணி முதல் 12.00 மணிக்குள் entry செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
21. தேர்வு அட்டவணையின்படி நடைபெறுகின்ற தங்களது மாணாக்கரின் விடைத்தாள்களின் Soft Copy-யை மாணாக்கர் அனுப்பிய அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள், கல்லூரி முதல்வர்கள், கல்லூரி mail-ன் (Google Drive)-வில் மாணாக்கரின் விடைத்தாளை அவர்களின் Register No._Subject Code (Example:1010118BD001_SBCA.pdf) save செய்து வரிசைப்படுத்தி College Name-ல் தனி folder create செய்து, அதன் folder link-யை தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலகத்தால் தனியே உருவாக்கப்பட்டுள்ள **tnteuonlinexam@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு share செய்து (Privilege-Editor Rights) கொடுக்கவேண்டும்.

    (அல்லது) பத்து பத்து attachments –ஆக விடைத்தாள்களை பல்கலைக்கழகத்திற்கு E-mail மூலம் அனுப்பவேண்டும்.
22. தங்களுடைய தேர்வு (10 மணி முதல் 1.00 மணிவரை (Full Course / 10 மணி முதல் 11.30 மணிவரை–Half Course) எழுதி முடித்த அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் தங்களுடைய

விடைத்தாள் Scan செய்து pdf file ஆக Mail/Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு அனுப்ப வேண்டும். பின்னர் Name, Register No., Answer sheets Sent என்ற தகவலை Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

23. மாணாக்கர் தங்களுடைய அனைத்து விடைத்தாள்களையும் தேர்வின் இறுதி நாளன்று/மறுநாளன்று கல்லூரி முதல்வருக்கு தரமான உறையில் வைத்து விரைவுத் தபால்/பதிவுத் தபால்(Speed Post/ Registered Post) மூலம் அனுப்புமாறு மாணவர்களை கேட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
24. கல்லூரி முதல்வர்கள் அனைத்து மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட விடைத்தாள்களை பாடவாரியாகவும், பதிவு எண் வாரியாகவும், தனித்தனியாக சேகரித்து தரமான உறையில் வைத்து, அதன்மேல் கல்லூரியின் பெயர், கல்லூரியின் குறியீடு, பாடத்தின் பெயர், பாடக்குறியீடு, தேர்வுத் தேதி, தேர்வு எழுதியவர்கள் மற்றும் எழுதாதவர்களின் (Present & Absent list) பதிவு எண்கள் போன்ற விவரங்களை குறிப்பிட்டு கல்லூரித்தேர்வுக்குழுவின் முன்னிலையில் seal வைத்து முதல்வர் கையொப்பமிட்டு பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
25. கல்லூரித் தேர்வுக் குழுவினருக்கான மதிப்பூதியம் (Honorarium) மற்றும் மாணாக்கரின் விடைத்தாள்களை சேகரித்து Bundle செய்வதற்கான செலவினத்தொகையானது பல்கலைக்கழக விதிப்படி வழங்கப்படும்.
26. இவ்விணையவழித் தேர்வு (Online Examination) குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை, அனைத்து ஆசிரியர்களும் படித்து தெளிவுபெற்று, மாணாக்கருக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
27. இத்தேர்வினை முறையாக நடத்துவதற்கு கல்லூரி முதல்வர்கள் உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
28. மேற்குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை கல்லூரி முதல்வர்களும், கல்லூரித் தேர்வுக்குழுவும் கருத்தில் கொண்டு மாணாக்கருக்கு தெரியப்படுத்துவதுடன், மாணாக்கரை இணையவழித் தேர்விற்கு ஆயத்தப்படுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

M. Govindan 14.09.2020

CONTROLLER OF EXAMINATIONS i/c

**இணைப்பு:** 1. உறுதிமொழிப் படிவம்.
2. விடைத்தாளின் முதல் பக்கம்.

**ANNEXURE 1**

## உறுதிமொழி

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக அறிவுறுத்தலின்படி 17.09.2020 முதல் 29.09.2020 வரை, இணையவழி மூலம் நடைபெற உள்ள B.Ed. / B.Ed.(Spl. Edn.) / M.Ed. / M.Ed.(Spl.Edn.) / B.Sc.B.Ed. (Non-Semester-IV Year)/M.Phil. இறுதியாண்டு தேர்வுகளை (Theory / Practical / Viva-Voce) பல்கலைக்கழக வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி எவ்வித தவறுமின்றியும், தடங்கலுமின்றியும் சிறப்பாக நடத்தி கொடுப்போம் என்று உறுதியளிக்கிறோம்.

**கல்லூரித் தேர்வுக்குழுவினர் கையொப்பம்:**

| வ.எண். | பதவி | கையொப்பம் |
|---|---|---|
| 1 | தலைவர் | |
| 2 | உறுப்பினர் 1 | |
| 3 | உறுப்பினர் 2 | |
| 4 | உறுப்பினர் 3 | |
| 5 | உறுப்பினர் 4 | |

**இடம்:**

**தேதி:**

ANNEXURE - II

# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

(Established under Tamil Nadu Act 33 of 2008)

GangaiammanKoilStreet, Karapakkam,Chennai - 600097.

## *ONLINE DEGREE EXAMINATIONS-MAY/JUNE 2020*
## *FRONT SHEET OF THE ANSWER BOOKLET*

| *College Code* | *College Name* | *Date of the Exam* |
|---|---|---|
| | | |
| *Name of the Degree* | *Name of the Student* | *Register Number* |
| | | |
| *Subject Code* | *Name of the Subject* | *QP Code* |
| | | |

| *Total No. of. Pages* | *Signature of the Student* | *Signature of the Principal* |
|---|---|---|
| | | |

### *For Office Use only*

| Q.No | 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 | 09 | 10 | 11 | 12 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Marks | | | | | | | | | | | | | |

| Q.No | 13(a) | 13(b) | 14(a) | 14(b) | 15(a) | 15(b) | 16(a) | 16(b) | 17(a) | 17(b) | 18(a) | 18(b) | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Marks | | | | | | | | | | | | | |

| Q.No | 19(a) | 19(b) | 20(a) | 20(b) | 21(a) | 21(b) | 22(a) | 22(b) | 23 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Marks | | | | | | | | | | |

| Grand Total |
|---|
| |

| *Name & Signature of the Examiner* |
|---|
| |